உ

சிவமயம்.

பாய்ச்சலூர்பதிகம்.

சென்னை.

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

புனு சுகந்த எண்ணெய்.

இந்த எண்ணெயிலிருக்கும் பரிமளமான து மனோரஞ்சித மலரைப்போல பலவித வாசனையைக் கொடுக்கும். சில வாசனை எ ண்ணெய்கள் கூந்தலில் தடவிக்கொண்ட சற்று நேரத்திலேயே மாரிவிடுவதுண்டு. இந்த எண்ணெயை கூந்தலுக்கு தடவிக் கொண்டு உங்கள் வழக்கப்படி எத்தனை நா ள்பொறுத்து தலைமுழுகினபோதிலும் இத ன் பரிமளத்தைப் பார்க்கலாம்.

ஒரு டப்பியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டு மானால் அறையணு ஸ்டாம்பு அனுப்பினா ல் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,
'நாராயணவிலாஸ்'
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

முருகன் றுணை.

பாய்ச்சலூர் பதிகம்.

காப்பு.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

மூலத்தின்மேலேநின்று
    மூன்றுமண்டலமுந்தாண்டி
சீலத்தின்வெளியாய்வந்து
    சிலம்பொலிபரமானந்தக்
கோலத்தின்மேல்நின்று
    குகன்றுமுகனைப்பாட
வாலிபரூபமான
    வைங்கரன் காப்பதாமே.

நூல்.

ஓதியதூலும்பொய்யே
யுடலுயிர்தானும்பொய்யே
சாதிபமொன்றேயாகுஞ்
சகலமும்வேறதாமோ
வேதியன்படைத்ததல்லால்
விதிதன்னைவெல்லலாமோ
பாதியேபரமேசூழும்
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 1

உரக்கமோவூனமுள்ளம்
உள்ளமோபுறம்போசீவன்
இறப்பவிமுன்னேபின்னே
ஈன்றதுபெண்ணேவாணே
கறப்பதுமுலையோபாலோ
காண்பதுமனமோகண்ணே
பறப்பதுஇறகோகாலோ
பாய்ச்சலூர்கிராமத்தாரே. 2

வெற்றிலைதாழைவாழை
வித்தொன்றுமுளைப்பதொன்றே

பற்றியயோனிபேதம்
பாருளோரறிந்திடாமல்
பெற்றவர்தம்மைத்தேடிப்
பிறந்தரிந்திறந்துபோனர்
பற்றிநின்றலைவதேனே
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 3

தீட்டடைக்கடைந்தகோலுஞ்
சீவனுஞ்சீவன்வேறே
வார்படைத்தந்தைதாயார்
மக்களுஞ்சுற்றத்தாரு
மோர்படைக்கடைந்தவெண்ணெய்
மோருடன்கூடாவண்ணம்
பாற்படத்திரளவேண்டும்
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 4

கொக்குமேற்குடுமிகண்டேன்
கோழிமேற்சூடுங்கண்டேன்
நெக்குறிவாலுங்கண்டேன்
நீரின்மேல்நெருப்புங்கண்டேன்

சற்குலமென்றுசொல்லிச்
சதுர்மறைபேசவேண்டாம்
பக்குவமறிந்துபாரும்
பாய்ச்சலூர்கிராமத்தாரே. 5

வித்தொருமரத்தையீனும்
மரமொருவித்தையீனும்
பெற்றதாய்பிள்ளையீனும்
பிள்ளையும்மதலையீனும்
உற்றபால்றயிரையீனும்
உதிரஞ்சுக்கிலத்தையீனும்
பற்றிநின்றலைவதேனோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 6

மகங்கொண்டதேகந்தன்னை
மற்றொருசுத்தங்காணர்
அகங்கண்டுபுறமுங்கண்டு
பவனுனக்கேதாரமானேன்
சுகங்கண்டுதுக்கங்கண்டு
சுக்கிலவழியேசென்று

யகங்கொண்டதேனோவென்னிற்
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 7

ஊருடன்பார்ப்பார்கூடி
யுயர்ந்ததோர்சாலைகட்டி
நீரிலேமூழ்கிவந்து
நெருப்பிநெய்யைத்தூவிக்
கார்வயற்றவளைபோலக்
கலங்கியவுங்கள்வேதம்
பாரைவிட்டகன்றதேனோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 8

சந்தனமகிலுவேம்புந்
தனித்தனிவாசம்வீசும்
அந்தனற்றீயில்வீழ்ந்தா
லதன்மணம்வேறதாமோ
செந்தலைப்புலையன்வீழ்ந்தாற்
றீமணம்வேறதாமோ
பந்தமுந்தீயும்வேறோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 9

ஒருபனையிரண்டுபாளை
யொன்றுநுங்கொன்றுகள்ளு
அறிவினிலறிந்தவற்கு
அதுவுங்கள்ளிதுவுங்கள்ளே
ஒருகுலையுயர்ந்ததேனோ
ஒருகுலைதாழ்ந்ததேனோ
பறையனைப்பழிப்பதேனோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. 10

பாய்ச்சலூர்ப்பதிகம்.

முற்றிற்று.